உண்ணுங்கள்'' என்றார் தந்தை. சில நொடிகளில் "அப்பா, அப்பா, ஒருவாய் சோற்றுக்கு அண்ணன் இரண்டு முறை கருவாட்டைப் பார்த்துவிட்டான் என்று தம்பி தந்தையிடம் முறையிட்டான். "அதிக உப்பு அவனைக் கொன்றுவிடும்'' என்று எச்சரித்தார் பிள்ளைகள் மீது அக்கறை கொண்ட தந்தை.

## 23. பரிசுப் பொருளாகப் பழைய 'நாள்காட்டி'

புத்தாண்டு பிறப்பின்போது புத்தாண்டு பரிசினை ஒருவருக்கு மற்றொருவர் அனுப்பினார். அஞ்சல் காரனிட மிருந்து அப் பரிசினைப் பெற்றுக் கொண்ட வீட்டுக்காரர், அந்த அஞ்சல்காரனுக்குப் புத்தாண்டுப் பரிசாக தன் வீட்டில்



வண்ணம் தீட்டினான். கடன் கொடுத்தவன் திருமணத்திற்காக ஏற்பாடுகள் நடக்கின்றன என்று நம்பும்படிச் செய்யவே இவ்வாறு செய்தான்.

சில நாள்களுக்குப்பின் அந்த வீட்டின் வழியாகக் கடன் கொடுத்தவன் சென்றான். பின் அவ் வீட்டு வாசலில் நின்று கடன் வாங்கியவன் இருக்கிறானா? என்று விசாரித்தான். வீட்டின் உள்ளிருந்து "எனது கணவர் வெளியில் சென்றிருக்கிறார்" என்று பெண் குரல் கேட்டது. இவ்வாறே கடன் கொடுத்தவன் பல நாள் கடன் வாங்கியவனைத் தேடிச் சென்றான். ஒவ்வொரு முறையும் அதே பெண்குரல் வழக்கமான பதிலையே தந்தது. சந்தேகமுன்ற கடன் கொடுத்தவன் அந்த வீட்டின் கண்ணாடிப் பலகணி வழியாக உள்ளே எட்டிப்பார்த்தான். பெண்கள் யாரும் உள்ளேயில்லை. கடன் வாங்கியவனே தன் விரல்களால் மூக்கைப் பொத்திக் கொண்டு பெண் குரலில் அந்த விடையைச் சொல்வதைக் கண்டான். சினம் கொண்ட அவன் பலகணியை உடைத்து உள்ளே சென்று கடன் வாங்கியவனை நையப் புடைத்தான். அப்போதும் அவன் அடியை வாங்கிய வண்ணம் "என் கணவர் கடன் வாங்கியதற்கு என்னை அடிக்கிறீர்களே?" என்று மூக்கைப் பொத்தியவாறு பெண் குரலில் மெல்லக் கேட்டான்.

## 29. பரபரப்பாக

சிற்றுண்டிச் சாலையை அடைந்ததுமே, "எனக்கு நான் கேட்ட பத்து முட்டை வறுவலை ஏன் இதுவரையிலும் தரவில்லை" என்று கேட்டான் ஒருவன். கடைக்காரனோ அவை ஓர் ஏனத்தில் கொண்டு வந்து கொடுத்து "விரைந்து

தான் எது?" என்றான் முதலாமானவன். "மனிதனின் தாடிதான்" என்றான் இரண்டாவது பேர்வழி. அவன் தொடர்ந்தான் "எனெனில் எவ்வளவு தான் முகத்தின் தோல் கடினமாக இருந்தாலும் அதில் தாடி முளைத்து விடுகிறதே" என்றான்.



*குறிப்பு :* சீன நாட்டில் தன்மான உணர்வற்றவனை முகம் தடித்தவன் என்று அழைப்பதுண்டு. நம் நாட்டில் கூட சூடுசொரணையற்றவனை தடித்த தோலன் என்பர்.

தான் செய்த பாவங்களுக்காக உடலை இரு கூறாக்க நரகத்தின் பலிபீடத்துக்குக் கொண்டு வரப்பட்டார் துறவி. இதனைக் கண்டு அவரது தொண்டன் ஓடிச்சென்று துறவியிடம் விளக்கம் கேட்டார். விளக்கம் தந்தார் துறவி. "உனக்குப் புரியாது மண்ணுலகில் பௌத்த மடங்களும், துறவிகளும் நாளுக்கு நாள் குறைந்து வருவதை உணர்ந்த, நரக உலகின் அதிபதி, இறந்துபோன ஒவ்வொரு துறவியையும்




இரண்டாக வெட்டி, *துறவிகளின் எண்ணிக்கையை* இரு மடங்காக்க ஆசை கொண்டு என்னை இவ்வாறு இரண்டாகப் பிளக்கப் போகிறார் என்றார். துறவி விளக்கம் கேட்டும், அவர் வெட்டப்படுவது கண்டும் விழி பிதுங்க வியப்புடன் நின்றார் தொண்டர்.

## 54. தவறான செயல்களால் ஏற்பட்ட விளைவு

போலி மருத்துவர் ஒருவருக்கு இரண்டு பிள்ளைகள். ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தனர். ஆனால் தன் மருத்துவத்தினால் மரித்துப்போன ஒரு குழந்தைக்கு ஈடாகத் தன் மகனை அவர் கொடுக்க வேண்டியது நேரிட்டது. தன் கவனக் குறைவினால் இறந்து போன மற்றொரு குழந்தைக்காகவும் தன் மகளையும் ஈடாகக் கொடுக்க வேண்டியது நேர்ந்தது. இதனால் வேதனையுற்ற அந்த மருத்துவர் தம் மனைவியுடன் பிள்ளைகள் இருவரையும் பிரிந்து மனக் கவலையுடன் வாழ்ந்து வந்தார்.

